# R5786 Profitless and Profitable Service

# பிரயோஜனமான மற்றும் பிரயோஜனமற்ற ஊழியம்

*"எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை." 1 கொரி 13:3*

அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியின் வரங்களை ஆராய்ந்து பேசுகிறார். 12வது அதிகாரத்தில், சுவிசேஷ செய்தியைக் கேட்டு கிறிஸ்துவின் சீஷர்களான ஆதிகால சபையிலுள்ள ஒவ்வொருவருக்கும் அதிசயத்தக்க வரங்களை கர்த்தர் கொடுத்தார் என்று காண்பித்திருக்கிறார். இந்த வரங்கள் இரண்டு காரணத்திற்தாக கொடுக்கப்பட்டன. அதைப்பெற்றுக் கொண்டவரின் பிரயோஜனத்திற்கும், மேலும் வெளியாட்களுக்கு சாட்சியம் கூறவும் ஆகும். சுவிசேஷ செய்தி புதிதாக இருந்தது. குழந்தையான சபையை ஆரம்பிக்க, சில நன்மை பயக்கக்கூடிய மற்றும் ஏற்றுக்கொள்ள தக்கதான முறைகள் தேவைப்பட்டன. இந்த பல்வேறு வரங்களை குறிப்பிட்ட பிறகு பொதுவான பிரசங்கத்தின் வரம் மிகவும் மதிப்புடையதாக இருந்தது என்று கூறுகிறார். பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன்." ஆவியின் கனிகள் மிகவும் முக்கியமானது என்று அவர்களுக்கு நிச்சயப்படுத்துகிறார். அன்பு என்பது மிகவும் முக்கியமான கனி என்றும், அது இல்லாமல் அனைத்து வரங்களும், அனைத்து வைராக்கியங்களும் மதிப்பற்றது என்றும் கூறுகிறார்.

ஆதிகால சபையில் இருந்த வரங்கள் நமது கால சபையில் இல்லையே என்று மிகவும் வருத்தப்படக்கூடிய கிறிஸ்தவர்கள் இன்றைய நாளில் இருக்கிறார்கள். இந்த ஆவியின் வரங்கள் தற்போது இல்லாததற்கு காரணம் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் விசுவாசமும் உண்மைத்தன்மையும் இல்லாததே என்று உறுதியாக அவர்கள் உணருகிறார்கள். இந்த வரங்களெல்லாம் ஒழிந்து போகுமென்று அப்போஸ்தலர் பவுல் சபைக்கு உறுதிபடக் கூறுவதை இவர்கள் கவனிக்கவில்லை என்று தெரிகிறது. அவர் சொல்வதைக் கேளுங்கள்: "அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம். அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் (புரிந்து கொள்ளக்கூடிய திறமை) ஒழிந்துபோம்...... ...............இப்பொழுது விசுவாசமும், நம்பிக்கை அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது." 1 கொரி 13:8,13) இந்த அதிசயிக்கத்தக்க வரங்கள் படிப்படியாக ஒழிந்துபோயின என்பதை நாம் காண்கிறோம். இந்த அப்போஸ்தலர்கள் மற்றும் அப்போஸ்தலர்கள் யாருக்கு கைகளை வைத்து இந்த வரங்களை கொடுத்தார்களோ அவர்களும் மரித்த பிறகு, இந்த வரங்களை யாரும் பெற முடிய வில்லை. எனினும் இந்த வரங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வரங்களை பெற்றிருந்தால், பரலோக இராஜ்யத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு அடையாளமல்ல. அந்த காலக் கட்டத்தில் இவைகளில் சில வரங்களை பெற்றிருந்த ஒருவர் கைவிடப்படக்கூடும்.

எந்த அளவுக்கு, விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பை ஒரு கிறிஸ்தவன் அபிவிருத்தி செய்கிறானோ, அந்த அளவுக்கு நித்தியத்தை வளர்க்கிறான். இவை மூன்றில் அன்பானது முதலாவது நிற்கிறது. முக்கியமான ஒரு உணர்வில் விசுவாசம் தோல்வியடையும்; முக்கியமான ஒரு உணர்வில் நம்பிக்கையும் ஒழிந்து போகும். ஏனெனில் பூரணமானது வரும்போது, முழுமையாக கிடைத்தபிறகு நம்பிக்கை முழுமையாக போய்விடும். நமக்கு நம்பிக்கை தேவைப்படாது. பரிசுத்த பவுல் கூறுவது போல, "ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? வரக்கூடிய மகிமைக்காக நாம் எதிர்பார்த்துக்கொண்டிருப்போமானால் அதில் நாம் தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருப்போம். நாம் கர்த்தரிடத்திலும், அவரது நற்குணத்திலும், உண்மைத்தன்மையிலும் உள்ள நம்பிக்கையை எப்பொழுதும் இழக்காதிருக்க நாம் விசுவாசத்தை அப்பியாசப்படுத்துவோம். ஆனால் இந்த அர்த்தத்தில் நம்பிக்கையும் விசுவாசமும் தேவைப்படாது. எனினும் அன்பானது எந்தவிதத்திலும், எந்த அளவிலும் அழியாது, ஆனால் அது விரிவடைந்து ஆழமாகும். "அன்பு ஒருக்காலும் ஒழியாது." இது ஒரு தேவனுடைய குணமாகும். ஒவ்வொரு பரிபூரண ஜீவியும் இந்த மகிமையான குணத்தினால் உருக்கொண்டிருக்கும். தெய்வீக சுபாவத்தை பெற்றிருப்பவர்கள் இந்த குணத்தை முழுமையாக உயர்ந்த நிலையில் அடைந்திருப்பார்கள்.

ஆவியின் வரங்களுக்கும், கனிகளுக்கும் இடையிலுள்ள இந்த வித்தியாசத்தில் தொடர்புடையவைகளில் நாம் கவனிக்கிற வேத வாக்கியத்தில் இந்த மொழியை அப்போஸ்தலர் பயன்படுத்துகிறார். அன்பில்லாமல் எப்படி தனக்கு உண்டான யாவற்றையும் ஏழைகளுக்கு அன்னதானம் பண்ணுவார்கள்? அப்போஸ்தலர் கூறுவது போல, அப்படிச் செய்வதில் குறைவான முக்கியத்துவம் நோக்கமாக இருக்கும் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அங்கே அன்பு இல்லையென்றால் அதில் பலன் ஏதுமில்லை. அதிக அன்பு இருந்தால், பலன் அதிகமாக கிடைக்கும். குறைவான அன்பு இருந்தால் குறைவான பலன் கிடைக்கும். ஏழைகளுக்கு கொடுக்கும் பெரும்பாலானவர்களுக்கு கொஞ்சம் அன்பு இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். தற்காலத்தில் செய்யப்படும் நற்காரியங்கள் அன்பினால் செய்யப்படுகிறது என்று நாங்கள் நம்புகிறோம். எந்த அளவுக்கு ஒருவர் தருமம் செய்தாலும் அது அவருக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். வீண் கர்வத்தினாலும் சுயநலத்தினாலும் ஒருவர் தருமம் செய்வாரானால் அது ஆசீர்வாத்தை கொண்டு வராது. இது சபைக்காக இருந்தாலும் அல்லது உலகத்திற்காக இருந்தாலும் உண்மையாயிருக்கிறது.

ஏழைகளுக்கு அன்னதானம் பண்ண தன்னுடையவைகளைக் கொடுத்தல் சுயநல முன்னேற்றத்திற்காகவோ அல்லது பிரபலமடையும் நோக்கத்துடனோ இருக்கலாம். பரிசேயர்கள் தங்களது பரிசுத்தத்தை ஒரு சாட்சியாக ஆக்கினார்கள். ஆனால் அவர்களது இந்த செயல்பாடுகளில் அன்பு முக்கியத்துவம் பெறவில்லை. அதன் பலனாகிய மனிதர்களின் புகழ்ச்சியை அவர்கள் அடைந்தார்கள் என்று நமது ஆண்டவர் கூறினார். ஒரு அரசியல்வாதி தன்னுடையவைகளைக் கொண்டு அன்னதானம் பண்ணினால், அதற்காக அவர்கள் தேர்தலில் அவனுக்கு ஓட்டு போட்டதின் மூலம் அதன் பலனை அவன் பெறுவான். அவனுக்கு இரண்டுவிதமான பரிசுகள் எதற்கு? ஆனால் அவனது ஓட்டுகளே அவனது அன்னதானம் பண்ணனதின் நோக்கமாகும். ஆனால் கர்த்தர் கொடுக்கும் பரிசு தற்காலத்திற்கும் வருங்காலத்திற்குமாக இருக்கிறது.

தனியார் தர்ம ஸ்தாபனங்களுக்கு பொது பொருட்களும், தனிப்பட்ட அன்பளிப்புகளும் அதிக அளவில் கொடுக்கப்படுகின்றன. நாம் ஆவியில் பசிதாக முள்ளவர்களுக்கு, உணவையும், ஆவியில் நிர்வாணிகளுக்கு வஸ்திரங்களையும் கொடுக்கலாம். ஆகையால் நாம் நமது பணத்தையும் செலவு செய்து நமது பொருட்களையும் கொடுத்து முடிந்த அளவுக்கு மேன்மையான வழியில் ஏழைகளுக்கு கொடுக்கலாம். எனினும் சரீரத்துக்கான உணவும் உடையும் தேவைப்படும் போது புறக்கணிக்கப்படகூடாது. ஆனால் ஆவிக்குரிய உணவும், வஸ்திரமும், அவனுக்கும் அவனுடையவர்களுக்கும் மற்ற எல்லா மனிதர்களுக்கும் உண்மையான அன்புடன் நாம் கொடுக்கவில்லை என்றால் கர்த்தருக்கு அது ஏற்புடையதாக இருக்காது. எந்த அளவுக்கு ஒரு கிறிஸ்தவன் கர்த்தரினிமித்தம் வெளியரங்கமாக மனுஷர் காணவேண்டும் என்று கொடுத்தாலோ அல்லது இதை செய்யும்படி மற்றவர்கள் எதிர்பார்ப்பார்கள் என்று நினைத்து செய்தாலோ அல்லது வேறு எந்த நோக்கத்தில் செய்தாலோ, அந்த அளவுக்கு வெகுமானம் பெறமாட்டார்கள். அது அன்பினிமித்தம் செய்யப்பட்டால் பரலோகத்தில் வெகுமானம் கிடைக்கும். இராஜ்யத்திற்கான குணலட்சண அபிவிருத்தியிலும் பிரயோஜனமாக இருக்கும்.